Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்
EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 42

## இறையன்பு கவிதைகளில் பெண்ணியம்

*நெறியாளர் முனைவர் செல்வராஜ்.க*
*எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி.,*
*உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் அரசுகலை மற்றும்*
*அறிவியல் கல்லூரி, இராசிபுரம் - 637401*
*மின்னஞ்சல்: ragamugil@gmail.com*
*ப்ரியா.சி*
*பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் அரசுகலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*இராசிபுரம் - 637401*
*மின்னஞ்சல்: spriya20151@gmail.com*

## அறிமுகம்

பெண்ணியம் என்பது பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக அரசியல், பொருளாதார நடைமுறைகள் , கட்டமைப்புகள் மற்றும் சமத்தவமின்மையைக் எதிர்க்கும் கவனப்படுத்தும் சமூக கலாசார, அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள் , கோட்பாடுகளின் தொகுப்பாகும் இது வரையறுக்கப்படுவதுண்டு. பெண்ணியத்தை வரையறுப்பதென்பதே கூட சிக்கலானதாக இருப்பதுண்டு. சமத்துவமின்மையின் மூலங்கள் சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகள் , பால் மற்றும் பால்நிலை அடையாளங்களை விமர்சிப்பது, கேள்விக்குட்படுத்துவதற்கான எல்லைகள் போன்றன தொடர்பில் பெண்ணியவாதிகளிடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. பால்

அடையளங்களான ஆண் , பெண் போன்றவை வெறுமனே சமூகத்தால் கட்டமைக்கப்பட்டவையே என்ற வாதங்களும் உண்டு.

தற்கால பெண்ணியவாதிகள் பெண்ணியத்தை இன சமூக கலாசார, மத எல்லைகளைக் கடக்கும் அடிப்படை இயக்கமாகக் கருதுகின்றனர். இவ்வாறாக பெண்ணியம் குறித்தான கருத்தாக்கங்களில் இறையன்பு கவிதைகள் இடம் பெறுவதை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெண்ணிய - சொல்விளக்கம்

குநஅinளைஅ என்பது ஆங்கிலச் சொல் குநஅiயெ எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானது. இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணியவாதம், பெண் நிலை ஏற்பு, மகளிரியல், பெண்நலன்கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது. “பெண்ணியம் என்ற சொல் நடப்பில் நிலைப்பெற்று விட்டது என்பதாலும், கருத்துக் குழப்பத்திற்கு இடம் தராமல் தெளிவாக உள்ளதாலும் பெமினிசம் என்கிற ஆங்கிலச் சொல்லின் தமிழ் இணைச்சொல்லாக இது வழங்கப்பட்டு வருகிறது. பெமினிசம் என்பதற்கு பெண்ணியம் என்பதே பொருத்தமான கலைச்சொல்லாகும்.”1 என்று பெண்ணியவாதிகளும் பெண்ணினத்தை ஆதரிப்பவர்களும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணிய விளக்கம்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்துகொண்டு அவற்றைக் களை முற்படும் இயக்கமாகும். அதன்மூலம் உலகளவில் அரசியல் , பண்பாடு , பொருளாதாரம் , ஆன்மீகம் ஆகியவற்றில் நல்ல மாற்றத்தை உருவாக்கிட முடியும் சார்லட் பன்ச் என்பவர். “பெண்ணியம் என்பது பெண்களுக்களுக்கான உரிமைகளைப் பெற்று தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்”2 என்று எடுத்துரைப்பார். தெற்காசிய நாடுகள், பெண்கள் சமூகம், அலுவலகம் , குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது பற்றிய விழிப்புணர்ச்சியையும் அத்தகைய இழிவுப்படுத்தும் போக்கினை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் புரிந்துக்கொண்டு செயல்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது.

## தமிழ் சூழலில் பெண்ணியம்

பெண்ணிய இயக்கங்களால் மேற்கத்திய நாடுகளில் பெண்களுக்கு ஓட்டுரிமை, தேர்தலில் போட்டியிடும் அனுமதி, குழந்தை பெற்றுக் கொள்வதில் தன்னுரிமை , சொத்துரிமை ,

சம்பளத்தில், பாலியல் பாகுபாடின்மை போன்றவற்றை பெறமுடிந்தது. இந்தியச்சூழலில் ஓட்டுரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமையும் பெண்ணிய பார்வை கொண்ட நேரு , அம்பேத்கர் போன்றோர் இருந்ததால் எளிதாக பெண்களுக்கு கிடைக்கப்பெற்றன. எல்லாப் பெண்களுக்கும் சொத்துரிமை; உள்ளது.

மனித இனத்தின் தோற்றத்திற்கு பல்வேறு செயல்பாடுகளுக்கும் பெண்கள் அடிப்படையாகக் காரணங்களைத் திகழ்கின்றனர். பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. அவர்கள் வாழ்வில் ஒரு பகுதியாக அமையும் nhண்களைப் பற்றிப் பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை புலவர்கள் பலரும் பெருமைப்படக் கூறியுள்ளனர். ஒவ்வொரு சிந்தனையாளரும் தத்தம் சிந்தனைக்கேற்பவும் தாம் கொண்ட கொள்கைக்கேற்பவும் தங்கள் படைப்புகளில் பெண்களைப் பற்றிப் பதிவு செய்துள்ளனர்.

மனித உயிர்களில் ஆண்களை உயர்வாகவும், பெண்களைத் தாழ்வாகவும் பல ஆண்டுகளாகவே கருதி வருகின்றனர். “இயற்கை என் கருப்பை அதில் சிந்தும் விந்துகளின் தந்தையும் நானே”3 என்று பகவத் கீதையில் கிருஷ்ணன் உரைக்கும் தத்துவமானது. ஆண் , பெண் உறவையும் ஆணின் சமூக மேலான்மையும் கடவுள் நிலையில் கூட ஆணாதிக்கப் போக்கே உள்ளது என சுட்டிக்காட்டுவதாக உள்ளது.சம உரிமைகளை ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதை விளங்கும் விதமாக அமரகவி பாரதியார்,

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்

அறிவி லோங்;கியிவ் வையந் தழைக்குமாம்

பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்

போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்

நாணு மச்சமும் நாய்கட்கு வேண்மாம்

ஞான நல்லறம் வீர சுந்திரம்

பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்”4 எனப் போற்றிப் பாடுகிறார்.

மரபு வழியான இலக்கியங்களில் பெண்களின் அங்க வருணனைகளே இடம் பெற்றன. ஆனால் தற்போது இந்நிலை மாறிப் பெண்களின் மன உணர்வுக்குகளுக்கு முதலிடம் கொடுத்து கவிதைகள் படைக்கப்பட்டு

வருகின்றன. அந்த வகையில் வெ.இறையன்புவின் பூபாளத்திற்கு ஒரு புல்லாங்குழல் என்ற கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

## இறையன்புவின் கவிதைகளில் பெண்ணியம்

பெண்ணியம் என்பது ஆண்களை எதிர்ப்பதும், ஆண்களைவிட மேலோங்கி இருப்பதும் என்பது தவறான கருத்தாகும். ஆண், பெண் இருவரும் தங்களது எண்ணங்களுக்குத் தகுந்தாற்போல சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பாதற்குப் போராட வேண்டும். சமூக நலனுக்காக என்ன செய்யலாம் என்பதில் ஆணுக்கு ஒரு பெண் துண்டுகோலாக இருக்க வேண்டும். இதையே பெண்ணியம் என்று கருதுகிறார் இறையன்பு.

பெண்ணுக்குக் கிடைக்கும் உரிமைகள் கடைக்காமல் போவதற்கு அவர்களின் மௌனமே காரணமாய் விளங்கி நிற்கிறது. அவளது சிக்கல்களும் சிந்தனைகளும் அவள் மனத்தின் அடி ஆழத்தில் மௌனமாய் உறைந்து கிடக்கின்றன. உதடுகள் பிரிந்துப் பேச முடியாமல் மனதில் கட்டுண்டு தங்களைப் பதிவு செய்து கொள்ளும் உரிமையை இழந்து நிற்கின்றனர். இதனை 'இதழ்கள் உதிர்கின்றன ஒவ்வொன்றாய்' என்ற தலைப்பில் பின்வருமாறு கூறுகின்றார் கவிஞர்.

"உதிர்வதற்கு முன்னாலேயே

கழுத்துகள்

துண்டிக்கப்பட்டு

மலர் வளையத்திலிருக்கும்

மலர்களே!

உங்கள் மரணத்திற்கும்

சேர்ந்துதானா

மௌன அஞ்சலி?"5

பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்குக் காரணம் அவர்களின் 'மௌனமே' என்று கூறும் விதமாக அமைந்துள்ளது. அதானல் பேச தோன்றிய இடத்தில் பேச வேண்டும் தன்னுடைய உரிமைகளை பெணடகள் போராட வேண்ட முன் வரவேண்டும் என்று இறையன்பு வலியுறுத்துகிறார்.

சங்ககாலம் தொட்டு இன்று வரை அ∴றிணைப் பொருள்களோடு உவமைப்படுத்தப்பட்டு பெண்ணுக்கு வழங்கவேண்டிய உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. பூங்கொடிகளே உங்கள் இதழ்களிலிருந்து ஊதுகுழலை எடுத்துவிட்டுப் புல்லாங்குழலைப் பொருத்தியிருக்கிறார்கள். ஆனால், இன்னும் அடுப்பை ஊதுவதற்குத்தான் அனுமதி தந்துள்ளனர் என்ற தன் உள்ளத்து ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர்.

“பூங்கொடிகளே!

என்றும் காலங்காலமாய்

உவமைப் பொருளாக்கப்பட்ட

தோழியரே!!

உங்கள் இதழ்களிலிருந்த

ஊது குழலை

ஊதறி எறியச் சொல்லிவிட்டு

இப்போது

புல்லாங்குழலைப்

பொருத்தியிருக்கிறார்கள்

ஆனால்

இன்னும்

அடுப்பை ஊதத்தான்

அனுமதித்திருக்கிறார்கள்” 6

ஊது குழலும், புல்லாங்குழலும் வடிவத்தில் வேறாயினும் இரண்டையும் அடுப்பூதப் பயன்படுத்தலாம். இப்படிப்பட்ட பெண்ணுரிமைதான் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

“அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?” என்றனர். தன் மன உணர்வுகளைக் கூட வெளிப்படுத்த முடியாமல் அடிமைகளாய், ஆதறவற்றவர்களாய் மகளிரின் வாழ்க்கை அமையவே இதனைக் கண்டு வெகுண்ட பாரதி, பெண்கட்கு விடுதலை இல்லையென்றால் பின்னர் இந்த நாடே

விடுதலையடைய முடியாது என்று கூக்குரலிடுகிறார். பெண்கள், என்னதான் மேடையில் ஏறிப் பெண் உரிமைபற்றி வாயாராப் பேசித் தீர்த்தாலும் துணைக்கு அழைத்துச் செல்ல துணைவன் வரும் வரைக் காத்திருந்து செல்லக் கூடிய அவல நிலைதான் பெண்களுக்கு நிலவுகிறது என்பதைச் சுட்டுகிறார்.

“மேடையிலே ஏறி

பெண்ணுரிமை பற்றிப் பேசிவிட்டு

துணைக்குத் துணைவன்

வரும் வரை

கூட்டம் முடிந்ததும்

காத்திருக்கத் தானே செய்கிறீர்கள்”7 என்ற கவிதை வரிகள் மூலம் கூறுகிறார்.

பெண் என்றாலே புனிதமானவள் என்று கூறும் இந்த உலகத்தில் அவள் புனிதங்கள் எல்லாம் கண்ணீராலே கரைகின்றன. கண்ணீரோடு தான் இன்றும் பெண்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர் என்ற நிலையினை ‘விழியில் ஒரு நீருற்று’ எனும் தலைப்பில்,

“எங்கள்

கண்ணீரை மட்டும்

பன்னீராக்க முடிந்திருந்தால்

நாங்கள்

பணக்காராகியிருப்போம்”8

என்னும் கவிதையின் மூலம் விளக்குகிறார். தண்ணீருக்குள் கண்ணீர் விடும் நிலைதான் இன்னும் பெண்களுக்கு நீடிக்கிறது என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார். பெண்களுக்குச் சுதந்திரம் இருந்தாலும் அவர்கள் தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணவும் அதற்காகப் போராடவும் மற்றவரின் துணையை நாடியிருக்கிறார்கள். பெண்ணைத் தெய்வமாக, தாயாக, குழந்தையாக, மனைவியாக, வேலைக்காரியாக, தோழியாக, மோகப் பொருளாக இவ்வனைத்து நிலைகளிலும் பார்க்கும் ஆண்வர்க்கம், அவளையும் ஒரு சுதந்திரமுள்ள மனிதப் பிறவியாகப் பார்க்கிறோமா? தனித்துவமுள்ள பிறவி

என்பதை மறந்துவிடுகிறோம். பெண்ணின் இன்றைய நிலைப்பாட்டை கவிஞர் தம் கவிதை மூலம் குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

மனித இனத்தின் தோற்றத்திற்கு பல்வேறு செயல்பாடுகளுக்கும் பெண்கள் அடிப்படையாகக் காரணங்களைத் திகழ்கின்றனர். பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. அவர்கள் வாழ்வில் ஒரு பகுதியாக அமையும் பெண்களைப் பற்றிப் பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை புலவர்கள் பலரும் பெருமைப்படக் கூறியுள்ளனர். ஒவ்வொரு சிந்தனையாளரும் தத்தம் சிந்தனைக்கேற்பவும் தாம் கொண்ட கொள்கைக்கேற்பவும் தங்கள் படைப்புகளில் பெண்களைப் பற்றிப் பதிவு செய்துள்ளனர். தமிழிலக்கியத்தில் பெண் விடுதலை, பெண்கள் முன்னேற்றம் என்று பேசும் எவரும் பாரதியைப் புறந்தள்ளிவிட்டுப் பேசிவிட முடியாது.

"பெண்மை வாழ்கவென்று கூத்திடு வோமடா!

பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!"9

## மேற்கோள் விளக்கம்


1. முனைவர் ரெங்கம்மாள்.இரா, முனைவர் வாசுகி.சி, (2005).பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப்பயன்பாடும். ப. 7
2. மேலது பக்.9-10
3. மேலது பக்.10-11
4. புhரதியார் ,பாரதியின் கவிதைகள் , ப.99
5. இறையன்பு .வெ , பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் , ப.5
6. மேலது , ப.84
7. மேலது , ப.86
8. மேலது , ப.100
9. புhரதியார் ,பாரதியின் கவிதைகள் , ப.433

## பின் இணைப்பு


1. முனைவர்ரெங்கம்மாள்.இரா,முனைவர்வாசுகி.சி,(2005).பெண்ணியம்அணுகு முறைகளும் இலக்கியப்பயன்பாடும். அறிவுப்பதிப்பகம், சென்னை -14 பன்னாட்டுத் தரப்புப்புத்தக எண் -81-88048-28-3
2. இறையன்பு .வெ , பூபாளத்திற்கொரு புல்லாங்குழல் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., சென்னை-600098
3. பாரதியார் , பாரதியார் கவிதைகள் ,சுதர்ஸன் பதிப்பகம், எண் : 17,ஜே.கே.காம்ப்ளக்ஸ், ராமநாதன் தெரு, சென்னை -600 017
4. தொல்காப்பியர், தொல்காப்பியம்
5. குறுந்தொகை